ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

08.10.2026

1. வேண்டும் வரம் தரும் வேலவா போற்றி
வினை வெல்ல வழிகாட்டும் சண்முகா போற்றி
தொண்டென உன் வழி மக்கள் வர
தேசிகன் என்னை அவதாரமாக்கி

2. ஆக்கியே அற்புதம் நிகழ்த்துகின்ற
ஆறுமுகா முருகா போற்றி போற்றி
ஊக்கமுடன் பராபவ தரிவை திங்கள்
உயர்வான சூலவாம் குருவார அருளாசி

3. அருளாசிதனை ஆறுமுக அரங்கனும்
அகிலத்தார் நலம் பெற உரைப்பேன்
பிரணவக்குடில் படைத்து அருளும்
பிரணவ மூர்த்தி பூசை கலந்துமே

4. கலந்துமே பிரணவம் முன் ஓதி
கட்டாயம் சரவணஜோதியை நமோ நம என
பலம்பெற அனைவரும் முழங்கியே
பாருலகில் அருளமுது உண்டுவர

5. வருகின்ற எதிர்கால பாதுகாப்புக்கு
வணங்கி சைவநெறி ஏற்று
தருகின்ற எண்ணம் தனை கூட்டி
தருமத்தில் பொருளுதவி செய்து வர

6. வருகவே மகிழ்வும் நிறைவும்
வருங்காலம் பாதுகாப்பாய் மாறும்
தருமபலம் பெருகப் பெருகவே
தானாக கருமவினை அகன்றுமே

7. அகன்றுமே அவரவர் வாழ்வில்
ஆபத்து இடை கண்டம் இல்லா
மருத்துவம் பல பாதுகாப்பாகவே
மகான்கள் ஆசியால் வந்தடையும்

8. அடையவே எதிர்ப்பு ஏவலிடர் அணுகா
அமைதி தேட்டு தன வளமுடன்

தடையற ஆரோக்கியம் குறைவிலா
தேக மனபலம் சகலவளமும் கூடி

9. கூடியே உலகோர் சிறப்பர்
குருவரங்கன் என் வழி வர
நாடிவரும் மேன்மேலும் வளர்ச்சி
நம்பிக்கையுடன் முழு சரணாகதி கொண்டு

10. கொண்டுமே பிரணவக் குடிலின்
குறைவிலா தொண்டு கலந்து
தொண்டர்களாகி இணையவே
தேற்றமும் நல்ல மாற்றமும் அடைவர்

11. அடையவே கலியிடர் கடந்துமே
ஆறுமுகனாருடன் அரங்கன் என் காட்சி
தடையற கண்டு பிறவா கதி பெறுவர்
தவராஜன் யானுரைத்த குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி